# இன்க்ளூஷன்

மாற்றங்கள் ஏற்படும்போதும் அவ்வப்போது புதிய முயற்சிகள் நிகழும்போதும்
காற்றுவாக்கில் புதுச் சொற்களும் சொற்றொடர்களும் காதில் வந்து மோதும்!
ஐந்தாண்டு காலமாக வழங்கிவரும் ஃபினான்ஸியல் இன்க்ளூஷன்,
ஐந்துமாத காலமாக முழங்கிவரும் இன்க்ளூஸிவ் எஜூகேஷன்!

இன்க்ளூஷன் என்பது யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமென
இந்திய அரசு கண்ட அன்பு மந்திரம் – எல்லோர்க்கும் எல்லாமுமென
நல்லவர் வழி காட்டிட வல்லவர் வகை செய்திட வங்கிக்கணக்கும்
கல்விக்கடனும் கல்விக்கு ஊக்கமும் உரிமையும் ஏழை எளியவர்க்குமாயின.

அரசு அளிக்கும் வாய்ப்பைக் கைப்பற்றித் தத்தம் வாழ்க்கைத் தரத்தை
நிரந்தரமாக உயர்த்திக்கொள்ளும் கடமை நம் அனைவரின் கரங்களில்!
'நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ!'
நல்லன மட்டுமே எல்லோர்க்கும் எல்லாமுமெனக் கவனமாயிருத்தல் நன்றன்றோ!

ஆடம்பரமும் மெத்தனமும் சுகம் தருமோ? வறுமையும் வாட்டமும் நீங்காமல்,
ஆரோக்கியத்திற்கும் சத்துணவுக்கும் முன்னுரிமை தராமல் வீண் பேச்சில்
செல்ஃபோனில் அரும் செல்வத்தையும் காலத்தையும் செலவழிக்கலாமா!
செய்தித்தாள் படித்திடாமல் டிவியில் வெற்று ஷோவும் ஸீரியலும் பார்க்கலாமா!

நடைபாதைக் குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்குள் பள்ளிக்குழந்தைகள்
தடையேதுமின்றி கால வரம்பின்றி கேமரா முன் குழந்தைப் பருவத்தைத்
தொலைக்கலாமா! தொலைக்காட்சிகளின் விளம்பர உத்திகளில் பிஞ்சுகளா?
தொழிற்சாலைகளுக்கு மட்டும்தானா குழந்தை வேலைத் தடைச் சட்டம்?

பெருங்கடன் பெற்றபின் காலத்தில் தவணைகளைச் செலுத்தாத பேராசையும்
அருங்கல்வி கற்றபின் அறிவின் கனலை ஆறவிட்டு விடும் அறியாமையும் நீக்கி
கடின உழைப்பு, செயல் திறன், எளிமை, ஒழுக்கம் மற்றும் கொள்கைப்
பிடிப்பையும் ஒவ்வொருவரும் இன்க்ளூஷனில் கொண்டுவர ஒளிருமே நம்நாடு!

**Lalitha Sitaraman**
**Senior Manager (System Analysis)**
**Information Technology Department**
**Central Office**
**13.6.2010**